# மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்
# தூத்துக்குடி

**39–பி, டி.ஆர் நாயுடு தெரு (முதல் தளம்)**
**தூத்துக்குடி–628002**
**தொலைபேசி எண் 0461–2324610**

**இணையதள முகவரி** : www.tutdrb.in **மின்னஞ்சல்முகவரி** : tutdrb@gmail.com

**விளம்பர எண்: 1 / 2019 நாள்: 07.08.2019**

தூத்துக்குடி மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கீழ்க்காணும் வகை கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்தியக் குடியுரிமையுடைய, கீழ்க்காணும் தகுதிபெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **www.tutdrb.in** என்ற இணையதள முகவரியில் மட்டுமே (Only through Online) **30.08.2019 பிற்பகல் 5.45 மணி** வரை வரவேற்கப்படுகின்றன.

| **வ.எண்** | **சங்கத்தின் வகை** | **காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை மற்றும் பதவி** | **பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி)** |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | நகர கூட்டுறவு வங்கி | 53 | ரூ.11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 (1+23 stages) |
| 2 | மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் | 1 | ரூ.5200-20200+ (தஊ ரூ.2400)* |
| 2 | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் (ஏ வகை) | 4 | ரூ.16000-54000 |
| 3 | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் (பி வகை) | 8 | ரூ.12200–33580 |
| 4 | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் (சி வகை) | 2 | ரூ.10050-29940 |
| மொத்தம் | | 68 | |

(மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை (Estimated Vacancy) தற்காலிகமானது, (Tentative) **மாற்றத்திற்கு உட்பட்டது).**

*புதிய ஊதிய விகித திருத்தத்திற்கு உட்பட்டது

**கூட்டுறவு நிறுவனங்கள் வாரியாக காலிப்பணியிடங்கள் விபரம் பின்வருமாறு-**

| தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (தலா ஒரு காலிப்பணியிடம்) | | | |
|---|---|---|---|
| வ. எண் | ஏ வகுப்பு | பி வகுப்பு | சி வகுப்பு |
| 1 | ஆறுமுகநேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | சிந்தலக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | கருப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 2 | நாலாட்டின்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | விருசம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | நத்தத்துப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 3 | சிவலார்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | நாகலாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | - |
| 4 | புதியம்புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 105 பிள்ளையார்நத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | - |
| 5 | - | இளம்புவனம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | - |
| 6 | - | 87 பிள்ளையார்நத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | - |
| 7 | - | கோடாங்கிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | - |
| 8 | - | அயன்பொம்மையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | - |

| கூட்டுறவு நகர வங்கிகள் | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | ஏ வகுப்பு | பி வகுப்பு | சி வகுப்பு | டி வகுப்பு |
| 1 | தூத்துக்குடி மேலூர் கூட்டுறவு வங்கி **(காலிப்பணியிடம் 19)** | பிரகாசபுரம் கூட்டுறவு நகர வங்கி **(காலிப்பணியிடம் 16)** | தூத்துக்குடி கூட்டுறவு வங்கி **(காலிப்பணியிடம் 6)** | திருவைகுண்டம் கூட்டுறவு நகர வங்கி **(காலிப்பணியிடம் 2)** |
| 2 | - | நாசரேத் கூட்டுறவு நகர வங்கி **(காலிப்பணியிடம் 10)** | - | - |

**காலிப் பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு**

| | | |
|---|---|---|
| பொதுப் பிரிவு | : | 20 |
| பிற்படுத்தப்பட்டோர் | : | 18 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர் | : | 14 |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | : | 2 |
| ஆதிதிராவிடர் | : | 10 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | : | 3 |
| பழங்குடியினர் | : | 1 |

1) இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

2) ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, சட்டப்பிரிவு 26(2) மற்றும் 27(c) ஆகியவற்றிற்கு உட்பட்டு நிரப்பப்படும்.

அ. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட சங்கங்களின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

ஆ. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட சங்கங்களின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

இ. தேர்வில் கலந்துகொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

## 1. முக்கிய நாட்களும் நேரமும்:

| | | |
|---|---|---|
| 1. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட வேண்டிய கடைசி நாள் | **30.08.2019**<br>மாலை 5.45 மணி வரை |
| 2. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | **22.09.2019**<br>முற்பகல் (09.30 மணி முதல் 12.30 மணி வரை) |

## 2. தகுதிகள்:

**அ. வயது**

i) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | |
|---|---|
| 1) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் | வயது வரம்பு இல்லை |
| 2) பிற வகுப்பினர் (OC) | **30 வயதுக்கு மிகாமல்.** |
| 3) அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 4) பிற வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | **48 வயதுக்கு மிகாமல்.** |
| 5) பிற வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | **40 வயதுக்கு மிகாமல்.** |

**ஆ) கல்வித் தகுதி: ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree) (10+2+3 pattern) மற்றும் கூட்டுறவுப் பயிற்சி.**

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்குப் பதிலாக, பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணி புரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல் நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- **கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே** மேற்படி உதவியாளர் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுப்பயிற்சி குறித்த விரிவான விவரங்கள் அடங்கிய பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை எண் 29/2013 நாள் 18.07.2013 தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப் படிப்பின்போது தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- ‘‘ஆதரவற்ற விதவை’’ என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

**3. விண்ணப்பக் கட்டணம்**

அ) **விண்ணப்பப் பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/—ஆகும்.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் சமூக நலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும் மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** சான்று பெற்றிருக்க வேண்டும்.

1) **<u>அகல்நிலை (Offline)</u>**

மேற்படி கட்டணம், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது கிளைகளில் நேரடியாகச் செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீதில் (Candidate’s copy of the chalan) உள்ள Journel ID என்ற எண்ணை விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidate’s Copy of the pay-in-slip) scan செய்து upload செய்ய வேண்டும்.

2) **<u>நிகழ்நிலை (Online)</u>**

தேர்வுக் கட்டணத்தை Online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள “**SBI Collect”** என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தாலாம். “**SBI Collect”** என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the “**SBI Collect**” service in the State Bank of India online paymet portal) தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை பிரிண்ட் எடுத்துக் கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் **DU ……..** என்று தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number) குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

**இணைய வழி கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.**

ஆ) மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DU … எண்ணை பிறரிடம் பகிரக் கூடாது. அதேபோல் மத்தியக் கூட்டுறவு வங்கியின் Jounal ID ஐ பிறரிடம் பகிரக் கூடாது. ஒரே DU எண்/ Journal ID எண் **ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களிருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **www.tutdrb.in** என்ற இணையதளம் மூலம் **30.08.2019 மாலை 5.45 மணி வரை** பதிவேற்றம் செய்யலாம்.

இ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

**ஈ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.**

## 4. விண்ணப்பிக்கும் முறை

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பப்படிவம் **www.tutdrb.in** என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப் படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

i) விண்ணப்பதாரரின் புகைப்படம் – 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

ii) விண்ணப்பதாரரின் கையெழுத்து – 50 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

iii) விண்ணப்பதாரரின் சாதிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

iv) மாற்றுத் திறனாளி சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

v) ஆதரவற்ற விதவை சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vi) முன்னாள் இராணுவத்தினர்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vii)தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

viii) கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

ix) மத்திய கூட்டுறவு வங்கி மூலம் விண்ணப்பக்கட்டணம் செலுத்தப்பட்டு இருப்பின் விண்ணப்பக் கட்டண இரசீது (Candidate's Copy of the pay-in-slip) – 100 kb அளவுக்கு மிகாமல் PDF File)

மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது, **விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

**5. எழுத்துத் தேர்வு**

அ) மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் www.tutdrb.in வெளியிடப்படும்.

எழுத்துத் தேர்வு மாவட்டத்தின், குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்

ஆ) எழுத்துத் தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், **பொது அறிவு, கூட்டுறவு மேலாண்மை, கூட்டுறவு கடன் மற்றும வங்கியியல் மற்றும் கூட்டுறவு கணக்கியல்** போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (Objective Type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

இ) மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணைய தளத்தில் வெளியிடப்படும்.

ஈ) எழுத்துத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் எழுத்துத் தேர்வுக்கான வினா விடைகள் (Key answers) தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்துப் பூர்வமாக அல்லது இமெயில் (tutdrb@gmail.com) மூலமாகத் தெரிவிக்க வேண்டும். தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையக் கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

**6. நேர்முகத் தேர்வு**

i) எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர்ப் பட்டியல் தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

iii) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

iv) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வரும் விண்ணப்பதாரர்களிடம், அவர்கள் எந்த வகைச் சங்கத்திற்கு எந்த வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட விரும்புகிறார்கள் என்ற முன்னுரிமை விருப்பம் (option) பெறப்படும். நேர்முகத் தேர்வு முடிவடைந்த பின்னர், தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது விண்ணப்பதாரர்கள் தெரிவித்த முன்னுரிமை கவனத்தில் கொள்ளப்படும்.

iv) எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முக தேர்வுக்கான மதிப்பெண் முறையே **85:15 என்ற விகிதத்தில்** இருக்கும்.

**7. தெரிவு செய்யப்படும் முறை**

அ) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு, இனச் சுழற்சி முறை, அவர்கள் தெரிவித்த முன்னுரிமை விருப்பச் சங்கவகை ஆகியவற்றின அடிப்படையில் அதற்குரிய சங்கத்திற்கு கணினி மூலம் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவார்கள்.

மேற்குறிப்பிட்ட முறைப்படி விண்ணப்பதாரர்களை சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் போது அதிக மொத்த மதிப்பெண் பெற்றவர்கள் இனச்சுழற்சியைப் பின்பற்றி அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்த வகைச்சங்கம்/சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவர். குறைவான மதிப்பெண் பெற்றவர்களுக்கு இனச்சுழற்சி அடிப்படையில் அவர்கள் விரும்பிய சங்க வகைக்கு ஒதுக்கீடு கிடைக்காமல் போகலாம்.

அத்தகைய நேர்வில் அந்தச் சமயத்தில் அவர்களது இனச்சுழற்சிக்கு எந்த வகைச் சங்கத்தில் காலிப் பணியிடம் இருக்கிறதோ அந்த வகைச் சங்கம் / சங்கத்திற்கு அவர் ஒதுக்கீடு செய்யப்படுவார்.

விண்ணப்பதாரர் ஒரு கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் அவரை வேறொரு சங்கத்திற்கு மாற்ற இயலாது. அவ்வாறு வேறொரு சங்கத்திற்கு மாற்றம் செய்யக் கோரி வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டது.

ஆ) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி, கூட்டுறவுப் பயிற்சித் தகுதி, சமூகப் பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் அனைத்தையும் சரி பார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

இ) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் சங்கத்திற்கு ஒதுக்கீடு ஆணை (selection and allotment order) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட சங்கத்தின் தகைமை வாய்ந்த அலுவலரால்/நிருவாகத்தால் பணியமர்வு ஆணை (appointment order) வழங்கப்படும்.

ஈ) முன்னாள் இராணுவத்தின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு முறை பொருந்தாது.

உ) தெரிவு செய்யப்படும் **மாற்றுத் திறனாளிகள்**, தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் **பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது எனபதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.**

## 8. இதர நிபந்தனைகள்

i) நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென **நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தேர்வு தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் ரத்து செய்யப்படும்.**

ii) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள **அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.**

iii) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட **90** நாட்களுக்குள் தூத்துக்குடி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது.

v) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

vi) விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை" கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

vii) விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். **ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில் நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.**

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

viii) விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி உடனடியாக நிறுத்தப்படும்.

ix) விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சினை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சினை ஏற்பட்ட **3** நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

x) ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் தகுதிகள் அனைத்தும் சமமாக இருந்தால், தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த விண்ணப்பதாரருக்கு தேர்வின்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

xi) கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு **0461–2324610** என்ற உதவி மைய எண்ணிலோ அல்லது tutdrb@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளவும்.

**இணைப்பதிவாளர்/தலைவர்,**
**கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**
**தூத்துக்குடி**